ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஹரிஸமய திவாகரம்.

தொகுதி அ. பிரமோதூத௵ மாசிமீ பகுதி உ.
Vol 8. February & March 1931. **No. 2.**

நம்பிள்ளை வைபவம்.

(7-ம் தொகுதியின் 162-ம் பக்கத்தொடர்ச்சி.)

ஒருகால் நம்பிள்ளை நஞ்சீயரை நோக்கி அவதாரங்கள் எதற்காக? என்று கேட்டனர். அதற்கு ஜீயர் அருளிச்செய்கிறார்.—

பெருமாள் ஒரோரவதாரங்களிற் பண்ணின * ஆனைத்தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பண்ணினவனை அந்தப்பலத்தை அநுபவிப்பிக்கைக்காக என்றருளிச்செய்தனர். அதுகேட்ட பிள்ளையும் பாகவதாபசாரந்தான் எது? என்று பரிவுடன் வினவினர். அதற்கு ஜீயரும், பாகவதாபசாரமாவது.— ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால் அவர்களையும் தங்களைப்போன்று ‡ ப்ராக்ருதிமான்களாக நினைத்திருக்கும் புல்லிமை. எங்ஙனமெனில்; ஸ்ரீ வைஷ்ணவர்களை (1) "திருவுடைமன்னர்" (2) "செழுமாமணிகள்"

---

* ஆனைத்தொழில்கள்—ஆனையின் செயல்போன்ற செயல்கள். அதிமாநுஷ சேஷ்டிதங்கள்: மனிதர் சக்திக்கு மீறிய செயற்கருஞ் செயல்கள் என்றபடி.

‡ ப்ராக்ருதிமான்கள்—உலகவசப்பட்டவர்கள்; தம்மைப்போன்ற சாமான்ய மனிதர்களென்றவாறு.

(1) திருவுடை மன்னரைக்காணில் திருமாலைக்கண்டேனே யென்னும் (திருவாய்மொழி) 4—4—8.

(2) திசைவில் வீசுஞ் செழுமாமணிகள் சேருந்திருக்குடந்தை ஷை 5—8—9.

(3)"நிலத்தேவர்"(4)"பெருமக்கள்"(5) "தெள்ளியார்"(6) "பெருந்தவத்தர்" (7) "உருவுடையார் இளையார்கள் நல்லார்" (8) "செய்த வேள்வியர்" (9) "தக்கார்மிக்கார்" (10) "வேதவிமலர்" (11) "சிறுமாமனிசர்" (12) "எம்பிரான்றன் சின்னங்கள்" (13) "பேராளன் பேரோதும் பெரியோர்", என்று இவ்வாறெல்லாம் பலபடியாக மிகவும் விரும்பி, நம் குலநாதராய் மயர்வறமதிநலமருளப்பெற்ற ஆழ்வார்கள் வெகுமதிபண்ணித் திருநாமங்கள் சாத்தி §வாய்புலத்தி அருளிச்செய்வர்கள். ஆகையாலே ஸ்ரீவைஷ்ணவர்களை தங்களோடொத்த பிரகிருதிமான்களென்று நினைத்திருத்தல் நேரே பாகவ

---

(3) சிந்தையினுற் சொல்லினுற் செய்கையால் நிலத்தேவர்
குழுவணங்கும் (திருவாய்மொழி) 7-10-10.

(4) பெருமக்களுள்ளவர் தம் பெருமானை ஷை 3—7—5.

(5) தெள்ளியார் திருநான் மறைகள் வல்லார் மலிதண்
சிரீவரமங்கை ஷை 5—7—9.
தெள்ளியார் பலர் கைதொழுந்தேவனுர் (நாய்ச்சியார்
திருமொழி) 4—1—0.

(6) பேராளன் பேரோதும் பெண்ணை மண்மேற்
பெருந்தவத்த ளென்றல்லாற் பேசலாமே
(திருநெடுந்தாண்டகம்) 20.

(7) உருவுடையார் (நாய்சசியார் திருமொழி) 1—6—0.

(8) செய்தவேள்வியர் வையத் தேவரறச
சிரீவர மங்கலநகர் (திருவாய்மொழி) 5—7—5.

(9) தக்கார் மிக்கார்களைச் சஞ்சலஞ் செய்யும்
சலவரை (பெரியாழ்வார் திருமொழி) 4—2—3.

(10) மிக்கார் வேதவிமலர் விழுக்கும்
என் அக்காரக்கனியே (திருவாய்மொழி) 2—9—8.

(11) சிறுமாமனிசரா யென்னை யாண்டாரிங்கே
திரியவே ஷை 8-10—3.

(12) எம்பிரான்றன சின்னங்கள் இவரிவரென் றாசைகள்
தீர்வார்களே (பெரியாழ்வார் திருமொழி) 4—4—9.

(13) பேராளன் பேரோதும் பெரியோரை
யொருநாளும் பிரிகிலேனே (பெரிய திருமொழி) 7—4—4

§ வாய்புலத்தி—வாயாரவாழ்த்தி.

தாபசாரமாமென் றருளிச்செய்தார். இதனால் ஆழ்வார்களும் உள்ளிட்ட அனைவராலும் (14) "கடன்மல்லைத் தலசயனத்துறைவாரைக் கொண்டாடும் நெஞ்சுடையார் அவரெங்கள் குலதெய்வமே" என்று பாராட்டி விரும்பும்படியான ஸ்ரீவைஷ்ணவ விஷயத்தில் ஸ்வ ஸாம்யபுத்திபண்ணுவதே அனர்த்தஹேது என்பதாம்.

நம்பிள்ளை நஞ்சீயர் பக்கலிலே ஸ்ரீபாஷ்யம் வாசித்தருளும் போது ஒருகால் பெருமாளுக்குத் திருப் § போனகம் சமைந்ததென்று விண்ணப்பித்தனர். அதுகேட்ட ஜீயரும் பிள்ளையை நோக்கி ஆனால் ‡ சொக்கத்தேவரைத் திருவாராதனம் பண்ணும் என்றருளிச்செய்தனர். அதற்குப்பிள்ளையும் அடியேன் திருவாராதனக்கிரமத்தை யறிந்தேனோ? என்று விண்ணப்பஞ்செய்தனர். அதுகேட்ட ஜீயரும் ¶ நானோ சாலவும் கிரமம் அறிந்துள்ளேன்; * த்வயத்தில் உத்தரவாக்கியத்தை அநுஸந்தித்துத் || திருவடி விளக்கி அமுது செய்யப்பண்ணமாட்டீரோ? என்றருளிச்செய் தனர்.

பின்பு பிள்ளை ஜீயரைநோக்கி எம்பெருமான் § உகந்தருளின

(14) கடன்மல்லைத்தலசயனத்துறைவாரை (பெரியதிருமொழி) 2—6—4

§ போனகம்—தளிகை. ‡ சொக்கம்—அழகு, அழகியதேவர்.

¶ மனம் வாக்குக் கடந்த பரம்பொருளாகிய எம்பெருமானது பெருமையை நினைக்கும்போது அவனை முறையறிந்து ஆராதிக்கவல்லார் எவருமில்லையாதலின் நானோ சாலக்கிரமம் அறிந்துள்ளேன்; என்றருளிச்செய்தார். நானும் அதனை யறியேனென்பது கருத்து.

* த்வயம்—இரண்டு கண்டங்களையுடையதொரு மந்திரம். இதனை மந்திரரத்னமென வழங்குவர்; அதில் உத்தரவாக்யம்—ஸ்ரீமதே நாராயணாய நம: என்பது.

|| திருவடி விளக்கல்—அர்க்ய முதலியன ஸமர்ப்பித்தல்.

§ உகந்தருளின இடங்கள்—எம்பெருமான் விரும்பியுறையும் தேசங்கள். இங்கு அவன் மூர்த்திகரித்திருக்கும் திவ்யமங்கள விக்ரஹங்களை யுணர்த்திற்று. கோயிலாழ்வாரில் திவ்யமங்கள விக்ரஹங்கள் பலவாயிருக்கும்பொழுது தளிகை சமர்ப்பிப்பது எல்லா மூர்த்திகட்கும் சேர்த்து ஒன்றிலேயோ? அன்றி ஒவ்வோர்மூர்த்திகட்கும் தனித்தனி வெவ்வேறு பாத்திரங்களிலேயோ? என்பது இங்கு, பிள்ளைக்கெழுந்த ஐயப்பாடு.

இடங்கள் பலவாய்த் திருப்போனகம் படைப்பது ஒன்றிலேயாகில் அமுது செய்தருளப்பண்ணும்படி எங்ஙனே? என்று வினவியருளினர். அதற்கு ஜீயரும் த்வயத்தில் பூர்வோத்தர கண்டங்கள் இரண்டுக்கும் நடுவே "ஸர்வமங்கள விக்ரஹாய ஸமஸ்தபரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம:" என்கிற % விசேஷணஸஹிதமாக உச்சரித்து அமுதுசெய்யப்பண்ணுவது என்றருளிச்செய்தார். இதனால் இரண்டு கண்டங்கட்குமிடையே இதனை உச்சரிக்கும்படி அருளிச்செய்தது † கைங்கரிய வாசக சதுர்த்தியுடன் ‡ இச்சதுர்த்தி சேர்ந்திருக்கைக்காகவும், % உபயநாராயண பதஸித்த விக்ரஹஸமர்ப்பகமாகைக்காகவும், * அநந்யப்ரயோஜநத்வத்யோதநார்த்தமாகவுமாம். இதனால் நம்பூர்வாசார்யர் த்வயமொழிந்த மந்திரங்கொண்டு திருவடி விளக்கார்களென்பது கருத்தாயிற்று.

ஒரு சமயம் நஞ்சீயர் நம்பிள்ளையை நோக்கி கேளீர் பிள்ளாய் பகவதனுபவம் பண்ணுபவனுக்கு விஷயாநுபவத்தில் § அந்வயமில்லை. இவ்வர்த்தத்தை ஆழ்வார்கள் பலவிடங்களிலும் அருளிச்செய்தார்கள். எங்ஙனமெனில்.—

(1) வாசுதேவன் வலையுளகப்படுதல் (2) மாதரார்கயற்க

§ விசேஷண ஸஹிதமாக உச்சரித்தல்—அடைமொழியைக்கூட்டியுச்சரித்தல்.

† கைங்கரிய வாசக சதுர்த்தி த்வயத்தில் உத்தரவாக்யத்திலுள்ள சதுர்த்தி [சதுர்த்தி—நான்காம் வேற்றுமை.] "இந்தச் சதுர்த்தி கைங்கர்யத்தைப் பிரகாசிப்பிக்கிறது." என்று லோகதேசிகன் அருளிச்செய்வதுங் காண்க.

‡ இச்சதுர்த்தி—ஸர்வ மங்கள விக்ரஹாய என்பதிலுள்ள சதுர்த்தி.

§ உபயநாராயண பதம்—த்வயத்தில் பூர்வோத்தரவாக்யங்களிலுள்ள நாராயண பதங்கள்.

* அநந்யப்ரயோஜநத்வ த்யோதகம்—எம்பெருமானுக்கன்றிப் பிறர்க்குரிமையல்லாதிருத்தல் என்னுங்குறிப்பு.

(1) மணிவண்ணன் வாசுதேவன் வலையுளே (திருவாய்மொழி) 5—3—6.

(2) மாதரார் கயற்கணென்னும் (திருமாலை) 15.

ணென்னும் வலையுளகப்படுதல் (3) மதுரக்கொழுஞ்சாறுகொண்ட சுந்தரத்தோளிலே யகப்படுதல் (4) சாந்தேந்து மென்முலையார் தடந்தோளிலே யகப்படுதல் (5) வானவர்க்கு வன்துணையான அரங்கத்துறையும் இன்துணைவனைத் துணையென்றிருத்தல். (6) ஆவியேயமுதே யென நினைந்துருகியவரவர் பணைமுலை துணையென்றிருத்தல் (7) அப்பொழுதைக்கப்பொழு தென்னாராவமுதத்தைப் பானம் பண்ணுதல் (8) பாவையர் வாயமுதத்தைப் பானம் பண்ணுதல் (9) நான்கு வேதப் பயனைப்பேறுதல் (10) மாதரார்வன முலைப்பயனே பேறுதல். ஒன்றில் இதுவாதல். ஒன்றில் அதுவாதல் என்று இவை முதலியவற்றால் பலபடியாய் அருளிச்செய்தனர். ஆகையால் (11) "அன்னமென்னடையினார் கலவியை அருவருத் தஞ்சினாயேல்" என்றும் (12) "முந்துறவுரைக் கேன் விரைக்குழல் மடவார் கலவியை விடு" என்றும் பரகாலரான திருமங்கையாழ்வார் முதலிய § விஷயருசியைக் காரியுமிழ்ந்தே எம்பெருமானையடைய

---

(3) மந்தரம் நாட்டியன்று மதுரக்கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத் தோளுடையான் சுழலையில் நின்றுய்துங் கொலோ (நாய்ச்சியார் திருமொழி) 9—1—0;

(4) சாந்தேந்து மென்முலையார் தடந்தோள் புணர்ந்தின்ப வெள்ளத் தாழ்ந்தேன் (பெரிய திருமொழி) 6—3—4.

(5) வன்துணை வானவர்க்காய் வரஞ்செற்றரங்கத்துறையும் இன்துணைவ னொடும்போய் எழிலாலி புகுவர்கொலோ (பெரிய திருமொழி) 3—7—6.

(6) ஆவியேயமுதே ஷை 1—1—2.

(7) அப்பொழுதைக்கப்பொழுது (திருவாய்மொழி) 2—5—4.

(8) பண்டுகாமரானவாறும் (பெரிய திருமொழி) 1—3—5.

(9) பாலென்கோ நான்குவேதப் பயனென்கோ (திருவாய்மொழி) 3—4—6.

(10) வாணிலாமுறுவல் (பெரியதிருமொழி) 1—6—1.

(11) அன்னமென்னடையினார் ஷை 9—7—2.

(12) முந்துறவுரைக்கேன் ஷை 9—8—1.

§ விஷயருசி—இந்திரிய விஷயங்களிற் செல்லும் ஆசை.

வேண்டுமென்று துணிந்து அருளிச்செய்தலால் * க்ஷுத்ர விஷயத்தை ‡ ஸவாஸனமாகப் பரித்யஜித்தே ¶ ப்ராப்த விஷயத்தைப் பற்றவேணும்; என்று அருளிச்செய்தார். பின்னையும் க்ருதார்த்தராய் ஜீயரைக்கணமும் பிரியாமல் அடிமை செய்து கொண்டு எழுந்தருளியிருந்தனர்.

நிற்க, ஜீயர் திருவாய்மொழிக்கு நூறுரு அர்த்தம் நிர்வஹித் தருளுகையில் நம்பிள்ளை ஜீயருக்கு ஸதாபிஷேகம் செய்வித்தருளினுரென்பது முன்பே கூறப்பட்டது. இங்ஙனம் நஞ்சீயர் ஸ்ரீ பாஷ்ய தர்சனம் நிர்வஹித்துக்கொண்டு பெரும் சிஷ்ய சம்பத்துடன் நூறு திருநக்ஷத்திரம் எழுந்தருளியிருந்தனர். பின்பு அந்திமதிசையிலே ஒரு நாள் ஜீயர் நோவுசாத்திக் கண்வளர்ந்தருளினர். அப்பொழுது ஜீயர் சிஷ்யரான குட்டிக்குறியிளையாழ்வார் ஜீயரைப்பார்த்து "த்வயத்தை அநுஸந்தித்தாலாகாதோ" என்றனர். அதுகேட்டு நஞ்சீயரான பெரிய ஜீயர் அவரை நோக்கி அது ஏன்? உமக்கு வேண்டாமல் எனக்கு இப்போது மாத்திரம் வேண்டியதிருப்பதேன்? நடையாடித்திரிவார்க்குவேண்டாமல் கிடைக்கப்பட்டார்க்கு வேண்டியோ த்வய மிருப்பது என்றருளிச்செய்தனர். அதுகேட்டு அவரும் நாணத்தால் உத்தரமொன்றும் உரையாதிருந்தனர்.

இதனால் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு த்வயம் ஸதாநுஸந்தேயம் (எப்பொழுதும் சிந்திக்கத்தக்கது) என்பது வெளியாயிற்று.

இதனைக் கேள்வியுற்ற தெற்காழ்வார் பட்டர் என்னும் பெரியார் ஜீயர் பாதத்திலே சென்று தெண்டனிட்டு அவரைநோக்கி உமக்குச் "செய்யவேண்டியதென்?" என்று வினவினர். அது கேட்ட ஜீயரும் "பெரியபெருமாள் ஸர்வஸ்வதானம் பண்ணியருள அடியேன் அநுபவிக்க விரைகின்றேன்" எனப்பகர்ந்தனர். அது

---

* க்ஷுத்ர விஷயம்—சிற்றின்ப விஷயம். ‡ஸவாஸனமாகப்பரித்யஜித்தல்—வாசனையுமின்றி அடியோடொழித்தல். [வாசனை-நினைவின்றிச்செய்யும் விருப்பம்.]

¶ ப்ராப்தவிஷயம்—அடையத்தக்க ஈச்வர விஷயம்.

கேட்ட தெற்காழ்வார் பட்டரும் இதனைத் திருமாலைதந்த பெருமாளுக்குத் தெரிவித்தனர். அவரும் இதனைப் பெருமாளுக்கு விண்ணப்பித்தனர். பெருமாளும் அவ்வாறே ஜீயருக்கு ஸர்வஸ்வதானம் பண்ணுவதாகப் புறப்பட்டருளி மடத்துவாசலிலே எழுந்தருளி திருப்பரிவட்டத்தைக் களைந்து ஜீயரை அநுபவித்தருளினர். ஜீயரும் பெருமாள் திருமேனியழகை முற்றும் அநுபவித்து அக மிக மகிழ்ந்து நம்பிள்ளை முதலிய குழாங்களை நோக்கி * பெருமாள் எனக்கு ஸர்வஸ்தானம் பண்ணியருளினர்; நாம் உங்களுக்கு ‡ ஸர்வஸ்தானம் பண்ணுவதாக ஒருப்பட்டோம்; விரும்பினர் விரும்பியவாறே பெறலாம்; என்றருளிச் செய்தனர். பிள்ளையும் அதுகேட்டு ஜீயர் திருவடிகளில் தெண்டனிட்டு அடியேனுக்குத் தஞ்சமாயிருப்பதொரு வார்த்தையருளிச் செய்யவேணும் என்று விண்ணப்பித்தனர். அதனைத் திருச்செவி சாத்திய ஜீயரும் பிள்ளையை நோக்கி § மணக்கோலத்திலே முள்ளைத்தெளிப்பாரைப்போலே இப்போது தஞ்சமாகக் கேட்பதொருவார்த்தை யுண்டோ?

* இங்குப்பெருமாளருளிய ஸர்வஸ்வதானமாவது-மறைவின்றித் திருமேனி காட்டுகை.

‡ ஜீயர் பண்ணின ஸர்வஸ்வதானமாவது—ஸம்ப்ரதாயத்தின் சிறந்த துணி பொருள்களை அஞ்சாமல் வெளியிடுகை.

§ மணக்கோலத்திலே—மணத்தின்பொருட்டு அலங்கரிக்கப்பட்ட மணவறையிலே. முள்ளைத்தெளித்தல்—விரோதத்தால்ஒருவரும் செல்லக்கூடாதவாறு முட்களைத்தூவுதல். இங்கு முள் தெளித்தல் மணங்கூடுவோர் கருத்துக்கு விரோதமான செயல். அதுபோல் ஜீயர் தமது திருவுள்ளத்துக்கு மிகவும் உகந்தேசியமும் பரமப்ராப்யமுமான பரமபதத்துக் கெழுந்தருளிப் புருஷோத்தமனை எம்பெருமானைக் கூடி மகிழும் பேற்றை மணக்கோலமென்றும் ஜீயரது பிரிவாற்றாது வருந்தி அவருக்குப் பின் தமக்குத் தஞ்சமாக வொன்றருளிச்செய்யுமாறு வேண்டிய பிள்ளை திருவுள்ளம் தமது திருவுள்ளக்கருத்தோடு மாறுபடுதலின் அதனை முள்ளைத்தெளித்தலென்றும் கூறியருளினர். ஜீயர்தமக்குப் பெரும்பேறாகக் கருதியிருக்கு மொன்றையே பிள்ளை தமக்குப் பேரிழவாகக் கருதி வினவினமையின் இவ்வாறு கூறியருளினரென்க.

என்று கூறிப்பின்னும் பிள்ளையை நோக்கி பிள்ளாய்! * "ஆத்மவிநியோகம் ஈச்வரனென்றிராமல் § ஈச்வரவிநியோகம் ஆத்மாவென்றிரும்" என்றருளிச் செய்தனர். அதில் தமது திருவுள்ளம் தெளிவடையாமையால் பிள்ளை பேசாது நின்றனர். அதுகண்டு ஜீயர் அவரை நோக்கி உம்முடைய நினைவு எது? கூறுவீர் என்று பணித்தனர். உடனே பிள்ளையும் ஜீயரை நோக்கி "ஒரு ஸ்ரீ வைஷ்ணவர் பரமபதத்திற்கு எழுந்தருளினால் இங்கிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர் என்ன நினைத்திருக்கக்கடவர்; என்று பணிவுடன் வினவினர். அதற்கு ஜீயர் அது அவரவர் நிலைக்குத்தக்கவாறன்றோ இருப்பது ○"ஆர்த்தனாகில் திருப்தனாகிறான்.

---

*ஆத்மவிநியோகம் ஈசவரனென்றிராமை-ஆத்மாவுக்கு ஈச்வரனை அநுபவப் பொருளாகக் கருதியிராமை. அவ்வாறு கருதாமைக்கு அடியாவது:—பலித்வாபிமானித்வமில்லாமை (பலித்வம்-பலனுடையனுந்தன்மை. அபிமானித்வம்-அகங்கரித்தல்).

§ ஈச்வரவிநியோகம் ஆத்மாவென்றிருத்தல் - ஈச்வரனுக்கு ஆத்மா போக வஸ்துவாகக் கருதியிருத்தல். அதற்கடியாவது-பலியுமாய் அபிமானியுமான சேஷி (உடையான்)க்குவிற்கவும் விலைகொள்ளவும் உரிய உடைமையாகை (பலி-உலகத்திலுள்ள சகல பலன்களையு முடையோன். அபிமானி-எப்பொருள்களும் தான் நினைத்தவளவிலுண்டானவைகளாதலால் அவற்றைத் தன் உடைமைகளாகமதித்திருப்போன்.)

○ ஆர்த்தனாவான்.—இருள்தருமாஞாலத்தின் கொடுமைக்கஞ்சிப் பிராகிருதவுடலை அப்போதே நீத்து எம்பெருமான் திருவடியைச் சேருதற்குத் துடிதுடித்துக்கொண்டிருப்போன்.

இங்கு ஆர்த்தனாகில் திருப்தனாதலாவது—ஆசாரியன் முதலிய ததியர்களைப் பிரியநேரும் பொழுது அது பொறாமல் ஒருவர்க்குத்தமதுடலையுங் கைவிட்டுவிடத்தக்க பேரன்பு முதிர்ந்து தோன்றுமாகில், அந்நிலையில் இப்போதே அத்ததியரை அங்குச்சென்று கூடவன்றோ போகிறோமென்று திருப்தி தோன்றுதலாம். ஆர்த்திபிறந்தானுக்குப் பரமபதப்பேறு ஒருதலையாம். அது கருதி அவன் மனவமைதியுற்று மகிழ்ந்திருப்பன் என்பது கருத்து. உடையவர் திருநாட்டுக்கெழுந்தருளின விஷயத்தைக் கேட்டமாத்திரத்தில் அது பொறாது குமாணூர் இளையவில்லி ஸ்வாமி யென்னும் பெரியார் அவர்பால் வைத்த அன்பின் முதிர்ச்சியால் தாமும் திருநாடலங்கரித்தமை ப்ரஸித்தம்.

‡ திருப்தனுகில் ஆர்த்தனுகிறான்" என்றருளி மீண்டும் பிள்ளையை நோக்கி, ஞானகார்யத்தில் உமக்குக்கர்த்தவ்யமில்லை; பெருமாளுக்கு உகப்பாகமுதலிகளையுங் கூட்டிக்கொண்டு தர்சனவிஷயங்களை நிர்வஹித்துச்செல்லக்கடவீர்' என்றருளிச்செய்தார். பின்னும் ஜீயர் அவரை யருகேயழைத்து வாரீர்பிள்ளாய்! பட்டர் அடியேனுக்கு நல்லுபதேசஞ்செய்து, "வேதாந்தி யென்கிற பெயரையுடையோம்; நம்பக்கல் அடித்தோம்; பெரும்பொருளை ஆசாரியனுக்குக்கையுறை (தக்ஷிணை)யாகக் கொடுத்தோம் என்று இறுமாந்திராமல் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிரும்." என்றருளிச்செய்தார். நீரும் அங்ஙனமே லோகாசார்யரென்கிற பெயரையுடையோம்; அருளிச்செயல் நாலாயிரத்திற்கும் பொருள் சொல்ல வல்லோம்; ஸ்ரீபாஷ்யத்திற்கும் ப்ரவர்த்தகர் என்று மேன்மையை நினைந்திராமல் எம்பெருமானார் திருவடிகளே தஞ்சமென்றிரும்; என்றருளிச்செய்தனர். பின்பு ஜீயர் பிள்ளை தொடக்கமான முதலிகளையும் க்ஷமை கொண்டு தீர்த்தங்கொண்டு அமுது செய்தருளப்பண்ணி கோயிலுக்கு நேரே பகவத் ஸேநாபதி ஜீயர் மடியிலே திருமுடியும், பின்பழகியபெருமாள்ஜீயர் மடியிலே திருவடிகளுமாகக் கணவளர்ந்தருளிப் பட்டர் திருவடிகளை நினைந்தவண்ணமே திருநாட்டுக்கெழுந்தருளினார். ஆசார்யரது பிரிவாற்றாமையால் மிகவும் வருந்திய பிள்ளையும் பலர் தேற்றத் தமக்குள் தேறி நின்று சகல சம்பிரமத்துடன் எதிகட்குச்செய்யும் முறைப்படி ஜீயரை பிர்மமத விதியால் ஸம்ஸ்கரித்து, பள்ளிபடுத்து மற்றுஞ் செய்யவேண்டியவற்றையுஞ் சிறக்கச் செய்து சீர்மையுடன் திருவத்யயனத்தையும் நடத்தியருளினார்.

---

‡ திருப்தனுவான:— மற்றோர் சரீரத்தை ஏற்றுக்கொள்ளுதற்கும் விருப்பமற்று இச்சரீரத்தின் முடிவுகாலம் எம்பெருமானருளினபடியே தன்னடைவே வந்தெய்தும்வரை அதனை யதிரோகதி யமைந்திருப்போன்.

இங்கு, திருப்தனுகில் ஆர்த்தனுதலாவது— அவ்வாறு அவர்களைப் பரிந்தும் தமதுடம்பையுங் கைவிட்டுவிடும்படி அவ்வளவு அன்பு முதிர்ச்சியின்றி உடம்புதானே நீங்குமளவும் பொறுக்கும்படியான அன்புடன் கூடி இப்போது உசாத்துணையிழந்தோம் என்று வருந்தியிருத்தலாம். இவ்வர்த்தங்களை நம்பிள்ளை அநுஷ்டானத்தளவுங் கண்டருளினர், எவ்வாறெனில்; அம்

ஒருநாள் நம்பிள்ளையை ஜீயர், கோஷ்டியிலே வைத்து மிகவும் கொண்டாடியருளி, கோஷ்டியை நோக்கித் தன் சிஷ்யனைத் தானே கொண்டாடுகிறான் என்றெண்ணாதீர்கள். * "கணபுரங் கைதொழும் பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப் பெறுவரோ" என்று § பண்டு சொனனாருமுளர் காணிர் என்றருளிச்செய்தார் என்பர். நிற்க; அவ்வப்பொழுது நஞ்சீயர் அருளிச்செய்த அரிய பொருள் பொதிந்த ரஹஸ்யவிஷயங்கள் பலவாயினும் இது நம்பிள்ளைவைபவமாதலால் பிள்ளையோடு தொடர்புடைய சிலவே இக்குக் குறிக்கப்பட்டன. இனி நம்பிள்ளை அவ்வப்பொழுது அருளிச்செய்த அரிய ரகஸ்ய விஷயங்கள் மேல் விவரிக்கப்பெறும்.

(தொடரும்)

ரெ. இராமையங்கார்,
தலைமைத் தமிழாசிரியர்,
ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல்,
மதுரை.

மங்கியம்மாள் பரமபதத்திற்கு எழுந்தருளும்பொழுது பிள்ளை அவர் திருமாளிகையில் எழுந்தருளினர். அப்பொழுது அங்கு அம்மாள் தேவிகள் முகமலர்ச்சியுடனிருக்கக் கண்டு ஸ்ரீபாதத்து முதலிகள் இதற்கடியென்னென்று பிள்ளையைக் கேட்டனர், அதற்குப்பிள்ளையும் தேவிகள் விஷயத்தில் இதற்கு முன்பு அம்மாள் பண்ணின விரோதமுண்டாகிலன்றோ அவர் பேற்றுக்கு இவர் வெறுப்பதென்றருளிச் செய்தார். பின்பு தம்முடைய ஸ்ரீ பாதத்து முதலிகள் ஒருவர் திருநாட்டுக்கெழுந்தருள அவரது மனைவி மக்கள் முதலியோர் வந்து பிள்ளையின் திருவடிகளில் வீழ்ந்தழுது வருந்தினர். அதுகண்ட முதலிகள் இதற்கு அடியென் என்று பிள்ளையைக்கேட்டனர். அப்பொழுது பிள்ளை "பெறுகிற தேசம் கொந்தளிக்கிறபடி கண்டால் இழக்குந்தேசம் என்படக்கடவது. என்றருளிச் செய்தனர் என்பர். இதனால் நற்பொருளை இழந்த தேசம் கையெடுத்தாற்றுவது சொல்லவேண்டாவன்றோ என்பது கருத்தாயிற்று.

* கணபுரங் கைதொழும் பிள்ளையை (பெரியதிருமொழி)

§ பண்டுசொன்னவர்-ஆழ்வான் தேவிகள். [பட்டர் விஷயத்தில் இவ்வாறு கூறியருளினார்.]

ஸ்ரீ:

அத்யவஸாயத்தின் பெருமை.

[சேரன்குளம் ஸ்ரீ. உ. வே. வித்வான்
வேங்கடாசார்ய ஸ்வாமி எழுதுவது.]

(21-ம் பக்கத்தொடர்ச்சி.)

இப்படி சரீரத்தைவிட்டுச் சந்தோஷத்தை யடையாதிருந்தாளாகையால் அங்கிதையாளென்று பெருமாள் கொள்ளுமளவில் குறைவுவாராது. இப்படி ஸ்வரக்ஷணத்தில் அந்வயமற்றிருந்தமையைப் பிராட்டிதானே "[illegible] [illegible]" "அஸந்தேசாத்து ராமஸ்ய தபஸச்சாநுபாலநாத், நத்வாகுர்மி தசக்ரீவபஸ்மபஸ்மார்ஹ தேஜஸா" என்று பேசினாள். இந்த சுலோகத்தால் பிராட்டி இராவணனை நோக்கி "பஸ்மீபவ" என்று ஸங்கல்பிக்கவில்லையென்று சொல்லுகிறாளா? அல்லது இராவணன் பஸ்மமாக வேண்டாமென்று ஸங்கல்பித்தேனென்று சொல்லுகிறாளா? என்பதை விசாரிப்போம்.

"ஹே பஸ்மார்ஹ, தேஜஸா த்வாம் பஸ்மநகுர்மி" என்றபோது பொதுவாக பஸ்மமாகப் பண்ணவில்லையென்றே கிடைக்கிறதாகையால் "பஸ்மீபவ" என்று ஸங்கல்பித்தேனில்லை என்றே கிடைப்பதாகும். அப்போது இவளுடைய பாதிவ்ருத்யாக்னிக்குப் பெருமை குறையும். அக்கினியைத் தொடும்போது 'நாம் சுடவேணும்' என்று நினையாதிருக்கவும் தன்னடையே அதின் ஸ்வபாவம் தஹித்துக்கொண்டு நிற்பதுபோல இவளுடைய பாதிவ்ருத்யாக்னியும் இவன் நினைவின்றிக்கே யிருக்கவும் தஹிக்க வேண்டியதாயிருக்க அதில்லாது இவள ஸங்கல்பம் அதுக்கு வேண்டியதாயிருந்தால் குறையேயாம். மேலும் ஸங்கல்பங்கொண்டே தஹிக்கவேண்டியதாகக்கொள்ளும்போது "பஸ்மார்ஹ" என்கிற ஸம்போதனமும் 'தேஜஸி' என்கிற பதமும் மந்தப்ரயோகமாகும்.

இவள் இராவணன் முகம்பாராது துரும்பையிட்டு 'நீசா!' என்றழைத்தவள். அப்போது; இவளுக்கு அவனிடம் எவ்வளவு அருவருப்பும் அலக்ஷ்யமும் உறைந்திருக்கும். அதுக்கு அநுகுணமாக "பஸ்மார்ஹ" என்கிற ஸம்போதனத்திற்கு அர்த்தங் கொள்ளவேணும். அப்போது 'பஸ்மார்ஹ' தியிலிடவேண்டாதே அதின் வாடையில் பொசுங்கவல்ல துஷ்டா! என்று அழைத்தாளாகவேண்டும். தவிர, இவனைப் பஸ்மமாக்குவது தேஜஸ்விநிலே யாகவேண்டியிருக்க 'தேஜஸா' என்கிறபதமும் ப்ரயோஜனமற்றதாகும். அந்தப்பதமில்லாதிருக்கவும் அந்த அர்த்தங்கிடைக்கக்கூடியதாயிருக்க அதைச் சாப்தமாகச் சொல்லக்கூடிய சப்தம் ப்ரயோகித்ததற்கு ஒரு கருத்துக் கொள்ளவேணும். அதாவது, தேஜஸா-தேஜஸைவ: என்னுடைய நினைவின்றிக்கேயிருக்கவும் பாதிவ்ருத்யாக்னி தன்னடையே உன்னைச்சுடும். தொட்டாரைச் சுடவேண்டுமென்று அனலுக்கு சொல்லிவைக்க வேண்டியதில்லை. சுடுகை அதற்கியற்கையன்றோ' இவ்வியற்கைமாறி, குளிரவேண்டுமானால் அப்போது 'சீதோபவ' என்று சக்தியுடையார் நினைப்பிடவேண்டும். இங்கும் அப்படியே உன்னைச்சுடாதிருக்க நினைப்பிட்டேன் என்கிறாள். லௌகிகாக்னியை நோக்கி திருவடிக்குச் சுடாதிருக்க வேண்டி 'சீதோபவ' என்று நினைப்பிட்டதுபோலத் தன்னுடைய பாதிவ்ருத்யாக்கினியை நோக்கி இராவணனுக்குச் 'சீதோபவ' என்று நினைப்பிட்டாள் என்றே கொள்ளவேண்டும்.

திருவடிக்குச் சுடுமானால் அவருக்கு அநர்த்தம் விளையும். அதுக்காக அங்குச் 'சீதோபவ' என்று அநுக்ரஹிக்கும்படி நேர்ந்தது. பாதிவ்ருத்யாக்னி இராவணனைச்சுடுமானால் அப்பொழுது ஸ்வரக்ஷணத்தில் அந்வயந்தப்பாது. இவள் நினைவின்றிக்கே சுடுவதும் இவளுடைய சக்தியின் பெருமையேயாம். ஆக இங்கும் 'சீதோபவ' என்ன வேண்டியது. இப்படியாகில் 'தேஜஸாபஸ்மார்ஹ' என்று அந்வயமாகும். என்னுடைய நினைவின்றிக்கேயிருக்கவும் என்னுடைய தேஜஸின் வாடையில் பொசுங்கவல்ல துஷ்டா! "த்வாம்பஸ்ம நகுர்மி அதவா நபஸ்மகுர்மி" உன்னைச்சாம்பலாகாதிருக்கச் செய்தேன் என்று சொன்னாளாகும். இப்போது

இரண்டு பதங்களும் பிரயோஜனமுடையனவாகும். ஆக, சரணாகதி நிஷ்டையில் ஊற்றமுற்றிருக்கும் அத்யவஸாயபூர்த்தி எவ்வகையிலும் ஸ்வரக்ஷணம் தனக்கு அந்வயியாதிருக்குமளவும் செல்ல வேண்டுமெனக் காட்டப்பட்டதாகும்.

நிற்க; இந்தச் சுலோகத்திற்கு இப்படிப்பொருள் கொள்ளும்போது மேலே ஜாம்பவான் மஹாராஜர் முதலானோரிடத்துப் பிராட்டி சரித்திரத்தை விரித்துரைக்கப் புகுந்த திருவடிவாக்கியத்தோடு விரோதிக்கும். எங்ஙனேயென்னில்;

தொடரும்.

ஸ்ரீ:

ஈட்டிற்கண்ட ஐதிஹ்யம்.

(ஏழாந்தொகுதியின் 306-ம் பக்கத்தொடர்ச்சி.)

௪-ம். பத்து.

௯-ம். திருவாய்மொழி—கோவைவாயாள்.

௫-ம். பாட்டு—கண்ணி யெனதுயிர்.

(39) ஒருநாள் ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான், திருப்பரிவட்டங்களை அழகிதாகவாட்டிக்கொண்டு எம்பெருமானாருக்குக்காட்ட, போரத்ருப்தராய் அவனைப் பெருமாள் திருவடிகளிலே கைபிடித்துக்கொண்டுபுக்கு 'நாயன்றே இவன் திருவரைக்கீடாம்படி வாட்டினபடி திருக்கண் சாத்தியருளவேணும்' என்றிவற்றைக்காட்டியருள, கண்டுகந்தருளி உடையவரை அருளப்பாடிட்டருளி, 'இவனுக்காக ரஜதன் நம் திறத்திற் செய்த குற்றம் பொறுத்தோம்' என்று திருவுள்ளமாயருளினார்.

---

(39) "ஏதுமாடையுமஃதே" என்றவிடத்தில் இவ்வாலாறுரைக்கப்பட்டுளது. திருப்பரிவட்டம்-ஆடை. அழகிதாகவாட்டி-அழகாக வெளுத்து. போரத்ருப்தராய்-மிகவுமனமகிழ்ச்சியுடையவ

ச-ம் திருவாய்மொழி—மண்ணையிருந்து.

ப்ரவேசம்.

(40) ஒரு அம்மையார், தாமும் தன்னுடைய பிள்ளையும் அத்யந்தம் ரிக்தையாயிருக்க, பிள்ளை வித்வானாய் உபயதோமுகி கோதானம் பிடித்து, தனம் நிரம்பக்கொண்டுவர அதைக்கண்டு அந்த ப்ரீதியாலே சரீரம் விட்டார்.

ராய். நாயன்றே-நாயல்லவா. பெருமாள் அருளப்பாடிடும்போது ஸ்ரீ வைஷ்ணவர்கள் தம்முடைய நைச்சியம் தோன்ற "நாயன்றே நாயன்றே" என்று சொல்லுகின்றமுறை இப்பொழுதுமுண்டு. திருக்கண் சாத்தியருளவேணும்-கடாக்ஷித்தருளவேணும். இவற்றைக்காட்ட-ஆடைகளைக் காண்பிக்க. இவனுக்காகவென்றது உம்முடைய விருப்பத்திற்கு விஷயமாகிய ஸ்ரீ வைஷ்ணவ வண்ணாத்தானுக்காக என்றவாறு. ரஜகன்-வண்ணான். நம் திறத்திற்செய்த குற்றம் என்றது நம் விஷயத்திற் செய்த பிழை என்றவாறு. அஃதாவது.—"நாம் கிருஷ்ணனாக அவதரித்தபோது பலராமருடன் வண்ணானிடத்திற்சென்று 'எங்கட்குத் தகுதியான ஆடையளிப்பாய்' என்று கேட்டபோது அவன் இராஜாக்களுக்கேற்ற வஸ்திரம் இடையர்கட்குத் தகுமோ?' என்று இறுமாப்புடன் கூறினன். அப்பொழுது நாம் அவனை நம் சினத்திற்கு விஷயமாக்கிப் போக்கினோம்; அதுமுதல் அக்குலத்தினர் நம்முடைய நிக்ரஹத்திற்கு விஷயமாயிருந்தனர் இனிமேல் அக்குலத்தினர் நமது அநுக்ரஹத்திற்கு விஷயமாயிடுக" என்று நம்பெருமாள் உகந்தருளினர் என்பதாம்.

40) மகிழ்ச்சியின் மிகுதியாலும் ப்ராணஹானியுண்டாகுமென்பதற்கு இவ்வரலாறு ப்ரந்தத்தில் உரைக்கப்பெற்றுளது. அத்யந்தப்ரீதியாய்-மிகவும் அன்புடையவர்களாய். உபயதோமுகி கோதானம் செய்யுமவர்கட்கு மிகுந்த பலனுண்டு, அதனை ஏற்றுக்கொள்ளுமவர்கட்கு மிகுந்த பாபமுமுண்டு. அம்மையாரின் புதல்வராகிய வித்வான் மிக்க வறியோராதலால அந்தத்தானத்தை ஏற்றுக்

௮-ம். பாட்டு-திருவுடைமன்னர்.

(41) நாதமுனிகள், ராஜா சாமந்தன் தலையிலே அடியையிட்டு யானைக்கழுத்திலே புக்கபடியைக் கண்டு, 'ஸர்வேசுவரன் பிரம்மாதிகள் தலையிலே அடியிட்டுப் பெரியதிருவடியை மேற்கொள்ளும்படி இதுவாகாதே, என்று மோஹித்தா ரென்று பிரசித்தமிறே. ராஜா ஸபரிகரமாக, கங்கை கொண்ட சோழபுரத்தேறப் போகச் செய்தே, பெரியமுதலியார் மன்னனார் திருவடிகளிலே ஸேவித்திருக்கச் செய்தே பெண்பிள்ளை வந்து நயமகத்திலே ஒரு குரங்கும் இரண்டு வில்லிகளும் ஒரு பெண்ணும் வந்து புகுந்தார்கள்' என்றவாறே, 'பெருமாளும் இளைய பெருமாளும் பிராட்டியும் ஐந்திரவியாகரண பண்டிதனும்' என்று புத்தி பண்ணிப் பின்தொடர்ந்து போய் முன்னேபோய், 'போகிறார்கள் போகிறார்கள் என்னக் கேட்டுக் கீழைவாசலிலே சென்றவாறே, 'இப்படிப்போகிறவர்களைக் கண்டிகோளோ' என்று வாசலிலவர்களைக் கேட்க, அவர்கள் 'கண்டிலோம்' என்ன அதுவே ஹேதுவாகத் திருநாட்டுக்கெழுந்தருளினார்.

கொள்வதால் வரும் பாபத்தையும் நோக்காமல் ஏற்றனர், உபயதோமுகி கோதானம் ஏற்றுக்கொள்வாசாரியராதலால் இத்தானஞ் செயயுமவன் மிகுந்த திரவியத்தைக் கொடுப்பதுண்டு. அந்தப் பொருளை வித்வான் கொண்டுவருவதைக்கண்ட தாயானவள் அடங்காமகிழ்வெய்தி உயிர் துறந்தாள். உபயதோமுகிகோ-இரண்டு பக்கமும் முகத்தையுடைய பசு. அஃதாவது-கன்றீனும் தருவாயிலுள்ள பசுவாம்.

(41) ஆழ்வார், எம்பெருமானோடு ஒருவகையான் போலியான பொருள்களைக்கண்டு அவனாகக்கருதி மயங்குகிற "திருவுடைமன்னரைக்காணில்" என்றவிடத்தில் இவ்வரலாறுரைக்கபபட்டுளது. சாமந்தன்-சிற்றரசன். பெரியதிருவடி-கருடன், ஓரரசன், சிற்றரசன் தலையில் அடியிட்டு யானையின்மீது ஆரோகணித்ததைக்கண்ட நாதமுனிகள் ஸர்வேசுவரன் ப்ரஹ்மாதிகள் தலையிலடியிட்டு பெரிய

கூம். பாட்டு—விரும்பி.

(42) ராஜேந்திரசோழனிலே திருவாய்க்குலத்தாழ்வாரொருத்தருண்டு. அவர் வருஷாவில் பயிர் பார்க்க என்று புறப்பட்டு மேக தர்சனத்திலே மோஹித்து விழுந்தார். இவர் விழுந்ததைக்கண்டு நின்ற குடிமகன் ஓடிவந்து அவரை யெடுத்துக்கொண்டு வந்து க்ருஹத்திலேவிட்டு 'இவர் ப்ரக்ருதியறிந்திருந்தும் இந்நாளிலே இவரை வயல் பார்க்கப் புறப்படவிடுவாருண்டோ?' என்றான்.

தொடரும்.

திருவடியின்மீது ஆரோகணித்ததாக மதித்து மயங்கினரென்றதனால் நாதமுனிகளின் திருவுள்ளம் இதர விஷயஸ்மரணமற்று ஈசுவரவிஷயமான அன்பே நிறைந்திருந்தமை விளங்கும். பெரிய முதலியார்-நாதமுனிகள். ஸபரிகரமாக-சேனைகளுடன். பெண்பிள்ளை-நாதமுனிகளின் திருக்குமாரத்தி. ஐந்திரவியாகரண பண்டிதன்-அநுமான். [ஐந்திரவியாகரணம்-இந்திரனால் செய்யப்பட்ட வியாகரணம்.]

(42) "கரும்பெருமேகங்கள் காணில் கண்ணனென்றேறப் பறக்கும்" என்றவிடத்தில இவ்வரலாறுரைக்கப்பெற்றுளது. ராஜேந்திரசோழன்-ஒரு கிராமம். மேகதரிசனத்திலே மோஹித்து-மேகத்தைக்கண்டு கண்ணனாக மதித்து மயங்கி. குடிமகன்-குடியானவன். இவருடைய பிரக்ருதியறிந்தும்-இவருடைய இயல்பறிந்தும். இவருடைய இயல்பாவது-ஒருவகையான் எம்பெருமானையொப்பான பொருள்களைக்கண்டு அவனாகமதித்து மயங்குவதாம். இந்நாள்-வருஷாகாலம்.